[திரு. ஆர். ஞானதாஸ்] [2009 ஜூலை 8

வெடி விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூபாய் 5 இலட்சமும், காயமடைந்தவர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபாயும் அரசு வழங்க வேண்டுமென்று கோரி, இம்மாதிரி விபத்துகள் நிகழாவண்ணம் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் .

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கு அருகே உசிலம்பட்டியை ஒட்டிய கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு, பட்டாசுத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள் 17 பேர் மறைந்திருக்கிறார்கள். 4 பேருடைய நிலை கவலைக்கிடம் என்று நான் விசாரித்தவரையில் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலைக்கு உரியவர்கள் யார் என்பதை விசாரித்தபோது, இது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் எண்ணியதுபோல அல்லது கூறியதுபோல, இது அரசுக்குச் சொந்தமான ஒரு தொழிற்சாலை அல்ல. ஞானசேகரன் அவர்கள், இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல் உரிமம் வழங்கலாமா என்று கேட்டார்; வழக்கமான ஆத்திரத்தோடு கேட்டார். 1963–இலேயே அப்படிப்பட்ட உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்போது யார் ஆண்டார்கள் என்பது ஞானசேகரனுக்கு நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகின்றேன்.

முற்பகல் 10–55

அதுபோக, இந்தச் செய்தி கிடைத்தபோது மத்திய அரசினுடைய அமைச்சர் திரு. மு.க. அழகிரி சென்னையிலே இருந்தார். அப்போதுதான் சென்னைக்கு வந்தார். செய்தியைக் கேள்விப்பட்டதும் விமானத்தின்மூலமாக அங்கே அவர் சென்று, பாதிக்கப்பட்ட மக்களையெல்லாம் சந்தித்து, அந்தத் தொழிற்சாலை அமைந்துள்ள ஊருக்கே சென்று, அங்குள்ளவர்களையெல்லாம் பார்த்து ஆறுதல் கூறி, நம்முடைய அரசின் சார்பாக, இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், காயம்பட்டவர்களுக்கு, காயங்களின் தன்மைக்கேற்ப, அவர்களுடைய சிகிச்சைக்குத் தேவையான அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக இந்த அரசினுடைய உத்தரவை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

2009 ஜூலை 8] [கலைஞர் மு. கருணாநிதி]

இறந்தவர்கள் 10 பேர் என்று முதலில் செய்தி கிடைத்தது. இப்போது கிடைத்திருக்கின்ற செய்தியின்படி, 17 பேர் இறந்து போயிருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. இதிலே, ஒரு இலட்சம், ஐந்து இலட்சம் என்றெல்லாம் அவர்களுக்கு நிதி கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள், அனுதாப உணர்வோடு இங்கே சொன்னார்கள். இதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு—இந்தத் தொழிற்சாலை இப்படிப்பட்ட விபத்திற்கு உள்ளானதற்குக் காரணம், 1963 ஆம் ஆண்டிலே இதற்கான உரிமம் பெற்று, 2011 ஆம் ஆண்டுவரையிலே அந்த உரிமம் செல்லும் என்ற நிலையை உருவாக்கியிருக்கின்ற அதனுடைய உரிமையாளர்கள், இந்த விபத்துக்குத் தாங்களும் பொறுப்பேற்று, சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும், இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கும், தங்களாலான உதவியைச் செய்வார்களேயானால், அப்படிச் செய்ய வேண்டுமென்று அரசின் சார்பாகக் கட்டாயப்படுத்தப்படுவார்களேயானால்தான், அடுத்து இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை உருவாக்க எண்ணுகின்றவர்கள் அல்லது முன்வருகின்றவர்கள், அதிலே ஏற்படுகின்ற விபத்துகளைச் சமாளிக்க, பல இலட்சம் ரூபாய் செலவிட வேண்டுமே என்பதையும் எண்ணிப் பார்த்துச் செயல்படுவார்கள். ஆகவேதான், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நான் காலையிலே பேசினேன். அவரும் சம்பவ இடத்திற்குச் சென்று, நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களும் அந்த நிவாரணப் பணியிலே ஈடுபடுவார்களென்று நான் நம்புகின்றேன். இனி இப்படிப்பட்ட விபத்துகள் நேராவண்ணம் அரசு பொறுப்பேற்றுப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று உறுப்பினர்கள் சிலர் இங்கே உறுதிபடச் சொன்னார்கள். இது அரசின் பொறுப்பினை மாத்திரமல்ல; இத்தகைய தொழிற்சாலைகளை உருவாக்குகின்றவர்கள், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்னென்ன என்பதையும், இதுபோன்ற ஆபத்துக்கள் ஏற்படும் என்பதையும் எண்ணிப் பார்த்து, அதற்கேற்ப தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

பொதுவாக, பட்டாசுக் கடைகளிலேதான் இந்தத் தீ விபத்து ஏற்படுகிறது என்பதற்காக, பட்டாசுகளையே யாரும் உற்பத்தி செய்யக்கூடாது என்று தடை விதித்தால், அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற மக்கள், சாதாரண, சாமானிய மக்கள், அவர்கள் எத்தகைய அவல நிலைக்கு உள்ளாவார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பட்டாசு வேண்டாமென்று சொன்னால், தீபாவளியே வேண்டாம் என்று

சொல்ல வேண்டும். தீபாவளி வேண்டாமென்று சொன்னால், பிறகு வேறு ஒரு விழாவிலே பட்டாசுகளை வெடிக்க வேண்டும். எப்படியிருந்தாலும், பட்டாசு என்பது இருந்துதான் தீரும். அந்தப் பட்டாசு உள்ளவரையில், இந்த விபத்துகள் தவிர்க்க முடியாதவைதான். இருந்தாலும், இதிலும் ஜாக்கிரதையாக தொழில் நடத்துகின்றவர்கள் ஈடுபட வேண்டும் என்பதை இந்தத் தீர்மானத்தின்மூலமாக அவர்களுக்கு வலியுறுத்தி, இங்கே குறிப்பிட்டதைப்போல இறந்தவர்களுடைய குடும்பங்களுக்குப் போதுமான அளவிற்கு நிவாரண நிதி வழங்கப்படும் என்பதையும், நேரிலே மாவட்ட அதிகாரிகள் சென்று பார்த்து, தேவைப்பட்டால் அதிக நிதியை வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–00

(ஆ) மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, திரு. பீட்டர் அல்போன்ஸ்? *(குறுக்கீடு)* சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலில் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நேற்று சொன்னோமல்லவா? அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் பயிற்சி மருத்துவர்கள் குறித்து சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, நீங்கள் சொல்ல வேண்டியதில்லை, உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) என்ன எடுக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடு) முறையாகத்தான் கூப்பிடப்போகிறேன். முறை என்னவென்று எனக்குத் தெரியும். உட்காருங்கள்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் பயிற்சி மருத்துவர்கள், தங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தக் கோரி போராட்டம் நடத்தி வருவது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. பி. தங்கமணி, திரு. செ. பொன்னுதுரை,